1979 அக்டோபர் 31]

கிடைப்பது இல்லை. கிட்டத்தட்ட 2 லட்ச ரூபாய் செலவு செய்து அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு இருந்தும், தண்ணீர் கிடைக்கவில்லை. அது வீணான செலவு என்கிற வகையில் உள்ளது. ஆகவே, அந்த நிலைமையை உடனடியாகப் போக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

(பதில் இல்லை)

## வேடப்பட்டி பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கல்.

* வினா 52—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுவாணி திட்டத்தில் வேடப்பட்டி பேரூராட்சியை சேர்க்கும்படி பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் மீது என்ன முடிவு செய்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) ரூ. 3.84 லட்சத்திற்கான உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9.30)

திரு. ஆ. நடராசன்: தலைவரவர்களே, அந்தத் திட்டத்தில் எவ்வளவு மக்கள் பலன் பெறுவார்கள் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, 5226-ல் 180-ஐ கழித்தால் எத்தனை வருமோ அத்தனை மக்கள் பயன்பெறுவார்கள்.

## மதம் மாறிய கிறித்துவ அரிசனங்களுக்குச் சலுகைகள்.

* வினா 53—திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிறித்துவ மதத்தில் சேர்ந்த அரிசனங்களுக்கும் இந்து அரிசனங்களுக்கு கொடுக்கப்படும் எல்லா சலுகைகளையும் விஸ்தரித்துத்தர இந்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதற்காக எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் என்ன?